**செய்தி வெளியீடு எண்: 741** **நாள்: 08.06.2024**

# செய்தி வெளியீடு

நேபாள நாட்டிற்கு புனித யாத்திரை சென்ற சென்னையைச் சேர்ந்த திருமதி செல்வி (55) என்பவர் புது டெல்லி திரும்பும் வழியில் உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹல்ட்வானி என்ற இடத்தில் இன்று (08.06.2024) மாரடைப்பால் இயற்கை எய்தினார்.

செய்வதறியாது திகைத்த உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு, இது குறித்த தகவல் கிடைத்ததும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இரங்கல் தெரிவித்ததுடன், அன்னாரது உடலை அரசு செலவில் சென்னைக்கு விரைந்து கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் உத்தரவிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் உதவியுடன் காலமானவரின் உடலை அரசு செலவில் சென்னை கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளை அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் திரு பா. கிருஷ்ணமூர்த்தி I.O.F.S. மேற்கொண்டு வருகின்றார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in